பக்கங்கள்:-19

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 16 | வியாழக்கிழமை | 02.11.2023 | அதிர்வு 93

## பத்திரிகையாளர் விசாரணையில்

(ந.லோகதயாளன்)

2020 ஆண்டு உதயன் பத்திரிகையில் வெளியான செய்திகள் மற்றும் ஒளிப் படம் தொடர்பாக உதயன் 07

# ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தல்



## ரணிலிடம் யோசனையை முன்வைக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முடிவு

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கான யோசனையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்வைக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆலோசனை நடத்தியுள்ளது. 07

## மயிலத்தமடு விவகாரம்: 9ஆம் திகதி விசாரணை

### மேன்முறையீட்டு நீதிமன்றம் முடிவு



மட்டக்களப்பு – மயிலத்தமடு மேய்ச்சல் தரை விவகார வழக்கு மீண்டும் மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு விசாரணைக்கு வந்திருக்கின்றது. 07

## யாழில் தீப்பந்தப் பேரணி



- எஸ்.நிதர்ஷன் -

மின்சாரக் கட்டண அதிகரிப்புக்கு எதிராகவும் எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிராகவும் யாழ்ப்பாணத்தில் நேற்று தீப்பந்தப் பேரணி முன்னெடுக்கப்பட்டது. ஐக்கிய மக்கள் 05

## இ.தொ.கா. விழா சிறப்புற வாழ்த்துகிறேன்! அழைப்பில்லாததால் பங்கு பெறவில்லை!!

### த.மு.கூ. தலைவர் மனோ எம்.பி. தெரிவிப்பு



“எனது மாவட்டம் தலைநகர் கொழும்பில் இன்று நடைபெறும் “நாம்-200” என்ற விழா சிறப்புற வாழ்த்துகின்றேன். எனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்பதால் விழாவில் கலந்துகொள்ள முடியாமைக்கு வருந்துகின்றேன்.”

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான 07




சிரேஷ்ட நிலையில் இருக்கும் ஓர் ஊடகவியலாளர் நேற்றுக் காலை தொலைபேசி அழைப்பு எடுத்தார். எடுத்ததும் “ஒரு கதை கூறுகிறேன். கேளுங்கள்!” – என்ற பீடிகையோடு ஆரம்பித்தார்.

ஒரு கிராமத்தில் இரண்டு பழசுகள். நண்பர்கள். வயது முதிர்ந்து, புலன்கள் தெளிவு குறையத் தொடங்கும் காலம். எதிரும் புதிருமாக சந்தித்துக் கொண்டார்கள். இருவரும் உரையாடத் தொடங்கி 06





# தலைமன்னார் முனையப் பகுதியை துறைமுகமாக பெயரிட தீர்மானம்

தலைமன்னார் முனையத்தை அண்மித்த பகுதியை துறைமுகமாக வர்த்தமானியில் பெயரிடுவதற்கு கப்பற்றுறை மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் நாள்களில் இதற்கான வர்த்தமானி வெளியிடப்படவுள்ளது என கப்பற்றுறை மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் ருவன் சந்திர தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் இராமேஸ்வரத்திற்கும் தலைமன்னாருக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பதே இதன் நோக்கமாகும்.

இந்தக் கப்பல் சேவையை இலாப மீட்டும் செயற்றிட்டமாக மாற்றுவது தொடர்பில் கலந்துரையாடப்படுகிறது என கப்பற்றுறை மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் ருவன் சந்திர தெரிவித்துள்ளார்.

துறைமுகமாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் தலைமன்னாரின் உட்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்துவதற்கு அதிக வாய்ப்புகள் காணப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் மருந்துகளை தரமற்றவையாக இறக்குமதி செய்தவர் நேற்றுக் கைது



ஹியூமன் இம்யூனோ குளோபியுலின் என்ற நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் மருந்துகளை தரமற்றவையாக நாட்டுக்குள் இறக்குமதி செய்தார் என கூறப்படும் நிறுவனம் ஒன்றின் உரிமையாளர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரத்தொலுகம பகுதியைச் சேர்ந்த 57 வயதான ஒருவர் கொள்ளுப்பிட்டியில் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி மனித இரத்தத்தில் தயாரிக்கப்படும் – உரிய தரத்தைக் கொண்டிராத – ஹியூமன் இம்யூனோ குளோபியுலின் மருந்து 22 ஆயிரத்து 500 குப்பிகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என அண்மையில் தகவல் வெளியாகியிருந்தமை தெரிந்ததே.

# 2024 ஆம் ஆண்டுக்கான சனத்தொகை வீட்டுக் கணக்கெடுப்பு நேற்று ஆரம்பம்





2024 ஆம் ஆண்டுக்கான சனத்தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பு நேற்று முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலக கட்டடத்தில் இருந்து இந்தக் கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டது.

10 வருடங்களுக்கு ஒரு முறை சனத்தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

இதற்கமைய, இறுதியாக 2012ஆம் ஆண்டு இந்த கணக்கெடுப்பு இடம்பெற்றிருந்தது.

குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தினால் இந்தக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

இம்முறை வழக்கமான காகித ஆவணங்கள் மூலமான தரவு சேகரிப்புடன், நவீன தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

CENTRAL PARK
JA-ELA

# CENTRAL PARK JA-ELA

## 15 ACRES LARGEST

GATED DEVELOPMENT PROJECT IN SRI LANKA

## OVER 40+ AMENITIES




## COMFORT ASSURED, SPACIOUS LAYOUTS & PREMIUM FACILITIES

KELSEY HOUSE - 3 BHK HOUSES
KELSEY VILLA - 3/4 BHK HOUSES
FAMILY VILLA - PRIVATE APARTMENTS
HARMONY PARK - HOUSING COMPLEX



24/2, Court Road, Weligampitiya, Ja Ela

Blue Ocean™
GROUP OF COMPANIES
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

3500+ UNITS
235+ PROJECTS
20+ CITIES

KELSEY HOMES
40 Years Housing Excellence

## Discover the Locations that Embraces the Ultimate Luxurious Living

+94 777 546 546 +94 770 774 774

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka. www.blueocean.lk www.kelsey.lk


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
“ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர,
மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்.”
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PICKUP & DROP
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
VAN FOR RENT
A/C
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882
+94 753 770 230

# விவசாய, பெருந்தோட்ட அமைச்சுகளின் கீழ் இடம்பெறும் சகல வெளிநாட்டு உதவித் திட்டங்களும் விசாரணையில்!

## அமைச்சர் மஹிந்த அமரவீர உத்தரவு

வெளிநாட்டு நிதியில் செயற்படும் விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத் தொழில் அமைச்சுகளின் கீழ் உள்ள அனைத்து திட்டங்களையும் விசேட விசாரணைக்கு உட்படுத்த அமைச்சர் மஹிந்த அமரவீர தீர்மானித்துள்ளார்.

மேற்படி அனைத்து திட்டங்களிலும் நிதிப் பயன்பாடு மற்றும் திட்டங்கள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்பது குறித்து கவனம் செலுத்துமாறு அமைச்சின் செயலாளர் ஜனக தர்ம கீர்த்திக்கு அமைச்சர் மஹிந்த அமரவீர பணிப்புரை விடுத்துள்ளார்.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர் –

“விவசாய அமைச்சின் கீழ் நான்கு வெளிநாட்டு நிதியுதவி திட்டங்களும் பெருந்தோட்டத் தொழில்துறையின் கீழ் இரண்டு திட்டங்களும் நடைமுறையில் உள்ளன.

குறிப்பாக வெளிநாட்டு நிதி இந்த திட்டங்களுக்கு கடன் வடிவில் கொடுக் கப்பட்டுள்ளதுடன் அந்த நிதியை சம்பந் தப்பட்ட வெளிநாட்டு நிறுவனங்களுக்கு மீளச் செலுத்த வேண்டும்.

எனினும், இந்த திட்டங்களின் மூலம்



பணம் செலவழிப்பதிலும் திட்டங்களை செயல்படுத்துவதிலும் பல குறைபாடுகள் உள்ளன.

விவசாயிகளின் நலனுக்காக வழங்க வேண்டிய பணத்தை செலவழித்து பெருமளவு பணம் விரயமாகியுள்ளது.” எனத் தெரிவித்தார்.

# இஸ்ரேலிலுள்ள இலங்கையர்கள் நாடு திரும்ப எந்தக் கோரிக்கையும் முன்வைக்கவில்லையாம்



இஸ்ரேலில் போர் இடம்பெற்று வருகின்ற போதிலும், அங்குள்ள இலங்கையர்கள் நாடு திரும்புவதற்கான எந்தக் கோரிக்கையையும் முன்வைக்கவில்லை என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், தொடர்ந்தும் பலர் இஸ்ரேலில் தொழில் வாய்ப்பை பெறுவதற்கான பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின் றனர் என அந்த பணியகத்தின் பேச்சாளர் காமினி சென விரட்ன தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கு வருடாந்தம் 2 ஆயிரம் தொழில் வாய்ப்புக் கான கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன.

அங்குள்ள இலங்கையர்கள் தாம் பாதுகாப்பாக இருக் கின்றனர் எனக் கருதுவதால் மீண்டும் நாடு திரும்புவதற் கான கோரிக்கையை முன்வைக்காதிருக்கக் கூடும்.

அவ்வாறான எந்தவொரு முறைப்பாடும், இலங்கைக் கான தூதரகத்திற்கோ, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கோ கிடைக்கப்பெறவில்லை.

காசாவில் மோதல்கள் இடம்பெற்று வரும் நிலையிலும், இஸ்ரேலுக்கான தொழில் வாய்ப்பு பயிற்சிகள் தடையின்றி முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் பேச்சாளர் காமினி செனவிரட்ன குறிப்பிட்டுள்ளார்.



## யாழில் தீப்பந்தப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சக்தியின் ஏற்பாட்டில் இந்தப் பேரணி நடைபெற்றது.

மாவைகலட்டி கிராமத்திலிருந்து ஆரம்பமான பேரணி கீரிமலை நகு லேஸ்வரர் ஆலயம் வரை சென் றது.

இந்தப் போராட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள், கிராம மக்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்த னர்.





## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

னர்.

"எங்கே, ஆத்துக்குக் குளிக்கப் போகிறீர்களா?" – இது முதலாமவரின் கேள்வி.

அதை நன்கு புரிந்து கொண்டவர் போல "இல்லை, நான் ஆத்துக்குக் குளிக்கப் போகிறேன்!" – என்று பதிலளித்தார் இரண்டாமவர்.

உடனே, அவரின் பதிலை நன்கு கிரகித்துக் கொண்டவர் போல முதலாம் நபர் திருப்பிப் பதில் அளித்தார். "நான் நினைத்தேன், நீங்கள் ஆத்துக்குக் குளிக்கப் போகிறீர்கள் போல்!" என்றார் அவர்.

இதுதான் அந்த ஊடக நண்பர் கூறிய கதை.

எனக்குப் புரியவில்லை. "ஏன் இந்த பீடிகைக் கதை?" – என்று கேட்டேன்.

"நாளை இரு பழசுகளின் சந்திப்பு இருக்கின்றதாம் . அதற்கு இது பொருந்துமா என்று பாருங்கள்!" – என்று கூறித் தொலைபேசியை வைத்தார் அந்த சிரேஷ்ட ஊடகவியலாளர்.

'ட்யூப் லைட்' போன்ற எனக்கு பற்றக் கொஞ்சம் நேரம் எடுத்தது. என்ன வாசகர்களே! நீங்களும் 'ட்யூப் லட்டா'? இல்லை என்றால் புரிந்திருக்கும். புரியாவிட்டால் விட்டுவிடுங்கள்.

\+ \+ \+

சம்பந்தன் பதவி விலகுவது பொருத்தமானது என்று தனது கருத்தைப் பகிரங்க வெளியில் தெரிவித்தமைக்காக சுமந்திரனை வாட்டி எடுக்கின்றன தனிப்பட்ட குரோதம் கொண்ட தரப்புகள். இதில் ஆச்சரியப்படத்தக்க விடயம் என்னவென்றால் தமிழரசுக் கட்சியின் முக்கிய பிரதிநிதிகள் சிலர் இவ்விடயத்தை ஒட்டித் தாம் தூம் என்று துள்ளிக் குதிப்பதுதான்.

உண்மையில் இது சுமந்திரனின் கருத்து மட்டும் அல்ல, அதையும் தாண்டி சம்பந்தன் சார்ந்த தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடும் அதுதான்.

அதுவும் இன்றைய நிலைப்பாடு


உதயன்
பக்குவமாகப் பேசி சம்பந்தனை பதவி விலக்கக் குழு அமைப்பு!
தமிழரசு மத்திய குழு தீர்மானம்

அல்ல. சரியாக ஒரு வருடத்திற்கு முன்னரே மேற்கொள்ளப்பட்ட முடிவு. 2022 செப்டெம்பரில் எடுக்கப்பட்ட முடிவு.

அதுவும் கூட, கட்சியின் முடிவு மற்றும் தீர்மானங்களை எடுக்கும் முழு அதிகாரம் கொண்ட உயர்மட்ட அமைப்பான மத்திய குழுவின் முடிவு.

'பக்குவமாகப் பேசி சம்பந்தனை பதவி விலக்க குழு அமைப்பு; தமிழரசு மத்திய குழு தீர்மானம்' – என்ற முடிவை அக்கட்சியின் பிரமுகர் சார்ந்த ஊடகம் தலைப்புச் செய்தியாக வெளியிட்டு இருந்ததை இங்கு ஆதாரத்துக்குச் சமர்ப்பிக்கிறேன். அந்த மத்திய குழுக் கூட்டத்தில் அந்தப் பத்திரிகையின் முதலாளியும் இருந்தார். அந்நிலையில்தான் அவரின் பத்திரிகை அச்செய்தியைத் முதலாம் பக்கத்தில் தலைப்பாக வெளியிட்டது.

அவரும் தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராஜாவும் கூட அந்த முடிவை எடுக்கும் மத்திய குழுவின் கூட்டத்தில் இருந்தனர்.

சம்பந்தனுடன் பக்குவமாகப் பேசி பதவி விலகச் செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட குழுவில் மாவை சேனாதிராஜாவும் அடக்கம். ஒரு தடவை இந்த விடயத்தை சம்பந்தனின் முன்னால் தாமே வாய் திறந்து மாவை வாங்கி கட்டிக் கொண்டார் என்றும் அறிந்திருந்தேன்.

கட்சி அந்த முடிவை எடுத்து இப்போது ஒரு வருடம் கடந்து விட்டது. சம்பந்தன் ஐயா இன்னும் தளர்ந்து விட்டார்.

சுமந்திரன் சொன்னார் என்பதற்காக விடயத்தைத் தூக்கிப் பிடித்து விளாசிக் கொண்டிருக்கிறார்கள் சிலர் – இது கட்சியின் தீர்மானம் என்பதை மறந்து.

சம்பந்தன் ஐயாவைப் பதவி விலகக் கோரி அவர்களில் ஒருவர் எழுதிய கடிதத்தைத் தேடிக் கொண்டிருக்கிறேன். கிடைத்தால் வாசகர்களுடன் பகிர்வேன்.

\+ \+ \+

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நடத்தும் 'நாம் – 200' நிகழ்வுக்கு மனோ கணேசன் உட்பட தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர்களுக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என்ற விடயத்தை முதலில் நானே சுட்டிக்காட்டி இருந்தேன். அது பற்றிய சர்ச்சை தொடர்பில் மனோ கணேசன் எம்.பியே இப்போது மனம் திறந்திருக்கின்றார்.

அழைப்பு அனுப்பாதமை 'அரசியல் கற்றுக்குட்டித்தனம்' என்பது என் கருத்து.

\+ \+ \+

தமிழர் தரப்பை – குறிப்பாக நம் தமிழ் அரசியல்வாதிகளை – தென்னிலங்கை ஏமாற்றுவதுதான் கடந்த ஏழரை தசாப்த கால அரசியல் வரலாறு.

தென்னிலங்கை அரசியல் தலைமைகள் மாத்திரம் அல்ல, தென்னிலங்கையே அப்படித்தான் போலும். நமது அரசியல்வாதிகளின் பட்டறிவுப் பாடம் அப்படித்தான் அமைந்திருக்கின்றது.

கடந்த வெள்ளியன்று இரவு கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்குப் புறப்பட்ட 'யாழ் நிலா' ரயிலின் 10 மணி நேரப் பயணம் வவுனியாவுடன் முற்றுப் பெற்றமை பற்றி சில நாள்களுக்கு முன்னர் விவரித்திருந்தேன். அந்த ரயிலில் பயணித்து, பயணிகளுடன் சேர்ந்து சுமந்திரன் எம்.பியும் பட்ட அவஸ்தையையும் சுட்டிக்காட்டி இருந்தேன்.

அடுத்த நாள் காலையில், வவுனியாவுடன் அந்த ரயில் முடங்கிப் போன போது, அது குறித்து ரயில்வே பொது முகாமையாளருடன் வவுனியாவில் இருந்தவாறு தொலைபேசியில் உரையாடி இருந்தார் சுமந்திரன்.

ரயில் பயணம் மூன்று மணி நேரம் தாமதமானால் அதன் அடிப்படையில் பயணிகளின் டிக்கெட் கட்டணம் மீளளிக்கப்பட முடியும் என்ற விதிமுறையின் கீழ், அந்தப் பயண கட்டணம் அந்தந்தப் பயணிகளுக்கு மீளளிக்கப்படும் என ரயில்வேப் பொது முகாமையாளர் சுமந்திரனுக்கு தொலைபேசியில் உறுதி கூறினார் என்பதையும் குறிப்பிட்டிருந்தேன்.

"பயணம் முடிவில் 3 மணி நேரம் அல்ல, ரயில் புறப்பட்டதே மூன்றரை மணி நேரம் தாமதமாகத்தான். வெள்ளவத்தை ரயில் நிலையத்துக்கு இரவு 10 மணிக்கு வரவேண்டிய ரயில், அதிகாலை 1.30 மணிக்கு வந்துதான் பயணத்தையே ஆரம்பித்தது" என்று சுட்டிக் காட்டி இருந்தார் சுமந்திரன் எம்.பி.

வழக்கம்போல தென்னிலங்கையின் வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. காற்றில் பறக்க விடப்பட்டது. எந்தப் பயணிக்கும் பணம் திருப்பிக் கொடுக்கப்படவேயில்லை.

இது குறித்து ரயில் நிலையங்களின் அதிபர்கள் மேலிடத்தில் விசாரித்துப் பார்த்தனர்.

அடுத்த நாள் காலையில் கொழும்பிலிருந்து புறப்பட்ட ரயில் மூலம் எப்படியோ பயணிகள் தமது பயணத்தைத் தொடர்ந்து முடித்துள்ளனர். அதனால் டிக்கெட் கட்டணம் மீள வழங்கப்பட மாட்டாது என்று மேலிடம் அறிவுறுத்தியது.

இதற்குள் சுமந்திரனுக்கு வாக்குறுதி அளித்த ரயில்வே பொது முகாமையாளர் இரண்டொரு நாள்களில் ஓய்வில் செல்கின்றார் என்று ஒரு தகவல் வேறு.

இவ்விடயம் குறித்து சுமந்திரனுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. அவர் நேற்று முன்தினம் ரயில்வே பொது முகாமையாளரோடு திரும்பவும் தொடர்பு கொண்டார்.

"அடுத்த நாள் பகல் வந்த ரயிலில் ஏறி (பதினாறு மணித்தியாலங்கள் வரை செலவளித்து) யாழ். போய்ச் சேர்ந்த பயணிகள் அங்கு ரயில் நிலையத்தை விட்டு வெளியேறும்போது தமது டிக்கெட்டுகளை ரயில் நிலையக் காவலர்களிடம் ஒப்படைத்துவிட்டு வெளியேறிவிட்டனர். அதனால் சம்பந்தப்பட்ட பயணிகளிடம் அவர்களுக்கு வழங்கப்பட்ட டிக்கெட்டுகள் இல்லை. அதனால்தான் பணம் மீளளிப்பதில் நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன" – என்று பொது முகாமையாளர் ஜாகா வாங்கப் பார்த்திருக்கின்றார். சுமந்திரன் விடவில்லை.

"நீங்கள் வழங்கியுள்ளவை எல்லாம் எலக்ட்ரோனிக் டிக்கெட்கள். கனணி மூலம் வழங்கப்பட்டவை. அனைத்துப் பயணிகளிடமும் அடையாள அட்டை இலக்கம் பெற்றுப் பதிந்தே அவை வழங்கப்பட்டுள்ளன. எனவே டிக்கெட் இல்லாவிட்டாலும் அடையாள அட்டை இலக்க அடிப்படையில் பணம் மீளளிப்புச் செய்யப்படுவதில் சிக்கல் ஒன்றும் இல்லையே" – என்று வாதிட்டிருக்கின்றார் சுமந்திரன்.

அதை ஏற்றுக் கொண்ட பொது முகாமையாளர், அந்த அடிப்படையில் பணம் மீளளிப்புச் செய்யப்படுவதற்கான வழிவகைகளைத் தாம் ஆராய்வார் என்றும் கூறியிருக்கிறார்.

இதற்கிடையில், அன்றைய தினம் காலையில் 8, 9 மணி ஆகியும் வவுனியாவை விட்டு ரயில் நகராதமையால், அங்கிருந்து வெளியேறி, கார் மூலம் சுமந்திரன் யாழ் வந்து சேர்ந்தார் என்று குறிப்பிட்டிருந்தேன் அல்லவா? வவுனியா ரயில் நிலையத்துடன் ரயில் பயணத்தை முடித்து வெளியேறியமையால், தமக்கு வழங்கப்பட்ட யாழ்ப்பாணம் வரைப் பயணிப்பதற்கான தமது டிக்கெட்டை சுமந்திரன் வவுனியா ரயில் நிலையத்தில் ஒப்படைக்கவில்லை. அது அவர் வசம் இப்போதும் இருக்கின்றது. அந்த டிக்கெட்டை வெள்ளவத்தை ரயில் நிலையத்தில் கையளித்து, டிக்கெட் கட்டணமான நாலாயிரம் ரூபா பணத்தை மீளப் பெற சுமந்திரன் இன்று அல்லது நாளை முயல்வார் என்று தெரிகின்றது. அப்போது ரயில்வே நிர்வாகம் என்ன செய்யப் போகின்றது என்பதைப் பார்ப்போம். சுமந்திரனுக்கு மட்டும் பணம் மீளளிப்புச் செய்து சமாளித்து விட ரயில்வே நிர்வாகம் முயன்றாலும் முயலலாம்.

தலைவர்களுக்கு சலுகைகளைக் கொடுத்து அடக்கி விடலாம் என்பதுதானே தெற்கின் எப்போதுமான குறுக்குப் புத்தியாக இருந்து வந்திருக்கிறது...?

\+ \+ \+

கடைசியாக ஒரு கொசுறுத் தகவல்.

இந்த மாத இறுதியில் ஒரு நிகழ்வுக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ் வருகின்றார் என்று ஒரு தகவல் கசிந்துள்ளது. என்ன நிகழ்வுக்காக வருகின்றார் என்பதை இன்னும் ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை . ஆனால் வரும் திகதி பற்றிய தகவல் கிடைத்தது. அதுவும் அதிர்ச்சித் தகவல்தான்.

அவர் வரும் திகதி நவம்பர் 27 என்கிறார்கள். மாவீரர் நாளில் யாழ் வருகிறார் அவர். அந்தத் திகதியில் அவர் யாழ் வந்தால் யாழ்குடா நாடு சூடாகும் என்பது திண்ணம்.

ஆனால் ஒன்று. அவர் பங்குபற்றும் ஒரு நிகழ்வில் மங்கள விளக்கு ஏற்றினால் கூட, அது மாவீரர்களுக்கு சுடரேற்றியதாக அர்த்தப்பட்டு விடும் என்பதையும் அவர் மறக்காமல் இருப்பது நல்லது.

# மன்னிப்புக் கோரினார் சுமன ரத்ன தேரர்



தென்னிலங்கையிலுள்ள தமிழர்களை வெட்டுவேன் எனக் கூறிய சர்ச்சைக்குரிய கருத்துத் தொடர்பாக அம்பிட்டிய சுமன ரத்ன தேரர் மன்னிப்புக் கோரியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாகக் காணொலி ஒன்றை வெளியிட்டு தனது கருத்தை அவர் பதிவு செய்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

”மட்டக்களப்பு, ஜயந்தபுரம் பகுதியில் அமைந்துள்ள மயானம் கடந்த 21ஆம் திகதி தரைமட்டமாக்கப்பட்டது. அங்கு எனது தாயின் சமாதியும் உள்ளதால், பொலிஸாருடன் அந்தப் பகுதிக்குச் சென்று பார்வையிட்டேன். இதன்போது சிலர் என்னைத் தூண்டும் வகையில், காணொலிகளை எடுக்க ஆரம்பித்தமையால், நானும் கோபத்தில் சில கருத்துக்களை வெளியிட்டிருந்தேன்.

இதனைத் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலர், தமிழ் மக்களைக் குழப்புவதற்காகப் பயன்படுத்தி வருகின்றார்கள். நான் கூறிய கருத்துக்கள் இனவாதத்தைத் தூண்டும் கருத்துக்கள் எனத் தமிழ் மக்களிடம் அவர்கள் கூறி வருகின்றார்கள்.

விசேடமாக, கூட்டமைப்பின் உறுப்பினர் இரா. சாணக்கியன், இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையில், நான் ஒரு பைத்தியக்காரன் என்றும், எனது தாயின் சமாதி அங்கே இருக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதிலிருந்தே, சாணக்கியன்தான் இந்த மயானத்தை உடைக்கப் பணித்துள்ளார் என நான் தெரிந்துகொண்டுள்ளேன்.

அப்படி அவர் செய்யாவிட்டால், இந்தச் செயற்பாட்டை ஏன் அவர் சரியாகக் காண்பிக்க முற்பட வேண்டும்?

இது தொடர்பாக நீதிமன்றத்துக்குச் சென்றபோது, மயானத்தைத் தரைமட்டமாக்கிய தரப்பினர் குற்றத்தை ஒப்புக் கொண்டதோடு, மீண்டும் மயானத்தை அமைத்துத் தருவதாகவும் கூறியுள்ளனர்.

நானும், தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கோருவதாக நீதிமன்றத்திடம் அறிவித்தேன். நான் கவலையுடன்தான் அன்று அவ்வாறு பேசினேன்.

இது இனவாதக் கருத்து கிடையாது. தனி ஈழம் வரப்போவதாகத் தெரிவித்து, தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காகவே சில நபர்கள் இவற்றைப் பயன்படுத்துகின்றார்கள். இதனை அனைத்து மக்களும் புரிந்துகொள்ள வேண்டும்.” – என்றார்.

## பத்திரிகையாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பத்திரிகை செய்தி ஆசிரியர்களில் ஒருவரான கு.டிலீப் அமுதனிடம் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் நேற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி உதயன் பத்திரிகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்தநாள் தொடர்பான செய்தியும், ஒளிப்படமும் வெளியாகியிருந்தது. அது தொடர்பாகவும், அன்றைய தினம் வெளியாகியிருந்த தமிழ்த் தேசியக் கட்சி மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு அழைப்பு விடுத்திருந்த செய்தி தொடர்பாகவுமே வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

உதயன் பத்திரிகை செய்தி ஆசிரியர் கு.டிலீப் அமுதன் கொழும்பில் உள்ள பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவுக்கு நேற்று அழைக்கப்பட்டு காலை 9 மணி முதல் மதியம் 1.30 மணிவரை வாக்குமூலம் பெறப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரின் பிறந்தநாள் செய்தி மற்றும் ஒளிப்படம் தொடர்பில் உதயன் பத்திரிகைக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலிஸாரால் முன்னர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதித் தேர்தலு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் கட்சிக்குள் பலகட்டப் பேச்சுக்கள் கடந்த சில நாள்களாக இடம்பெற்று வருகின்றன என்று அறிய முடிகின்றது.

நாட்டின் அபிப்பிராயத்தைத் துல்லியமாகப் பரிசோதிக்கப் பொதுத் தேர்தலைப் பயன்படுத்த முடியும் எனவும், அதன் பெறுபேற்றின் அடிப்படையில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் முடிவெடுக்க வேண்டும் எனவும் பொதுஜன பெரமுனவினர் ஆலோசித்துள்ளனர்.

இந்தக் கலந்துரையாடல்களில் எதிர்வரும் வரவு – செலவுத் திட்டம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

வரவு – செலவுத் திட்டத்தைத் தோற்கடிப்பதற்கான எந்தத் தீர்மானமும் இதுவரை எடுக்கப்படவில்லை.

அமைச்சரவை மறுசீரமைப்பின் பின்னர் பொதுஜன பெரமுனவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் சில முறுகல்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் வரவு – செலவுத் திட்டத்தில் சில அமைச்சுகள் மீதான ஒதுக்கீடுகளை தோற்கடிக்கும் நோக்கில் பொதுஜன பெரமுனவுக்குள் குழுவொன்று செயற்பட்டு வருகின்றது என அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தமையும் குறிப்பித்தக்கது.

## இ.தொ.கா. விழா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மனோ கணேசன் கூறியுள்ளார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எனக்கு அழைப்பு விடுக்கப்படாமை குறித்து நேற்று நண்பகல் அறிந்துக் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, என்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு, “நான் என் கையெழுத்தில், உடனடியாக அழைப்புக் கடிதம் அனுப்புகின்றேன். கலந்துகொள்ளுங்கள்” என்று கூறினார்.

“உங்கள் அரச கட்சிகள் விழாவாக இது நடக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை நன்கு விளங்குகின்றது. ஆகவே, அங்கே வந்து அதில் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்பட நான் காரணமாக இருக்க விரும்பவில்லை. ஆகவே நான் கலந்துகொள்ளவில்லை” என்று ஜனாதிபதியின் கருத்தை நாகரிகமாக நான் மறுத்து விட்டேன்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் ஒரு விசேட குழுவை, இந்திய வம்சாவளி மலையக மக்கள் தொடர்பில் அமைத்தமை தொடர்பில் அதிகாரபூர்வமாக அறிவிப்பதாகவும், “அந்தக் குழுவில் பங்கு பெற்று உங்கள் யோசனைகளை முன் வையுங்கள்” என்றும் ஜனாதிபதி விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

உங்கள் அரசு மக்கள் தொடர்பில் செய்யும் நல்ல காரியங்களை நாம் எப்போதும் வரவேற்போம் என்று பதிலளித்தேன்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர், கொழும்பு மாவட்ட எம்.பி. என்ற முறைகளில் எனக்கு அழைப்புகள் தரப்படாவிட்டாலும்கூட, இந்நிகழ்வுக்கு அழைக்கப்பட்ட இந்திய, தமிழக அரசியல் தலைவர்களை ”வருக, வருக” என இலங்கை நாட்டுக்கும், தலைநகர் கொழும்புக்கும் வரவேற்கின்றேன்.” – என்றார்.

## மயிலத்தமடு விவகாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வழக்கை எதிர்வரும் 9 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுக்க நேற்று நீதிமன்றம் முடிவு செய்தது.

மட்டக்களப்பு, மயிலத்தமடு மேய்ச்சல் தரையில் சட்ட விரோதக் குடியேற்றங்கள் இடம்பெறுகின்றன எனத் தெரிவித்து, அதை ஆட்சேபித்து மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம் (ஜனா) ஆகியோர் சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 2021 ஆம் ஆண்டு ரிட் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கு அப்போது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது அத்தகைய சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களை அகற்றி, மேய்ச்சல் நடவடிக்கைக்குப் பிரதேசம் விடுவிக்கப்படும் என சட்டமா அதிபர் தரப்பில் நீதிமன்றத்தில் வாக்குறுதி வழங்கப்பட்டதன் பேரில், 2022 ஜுலை அந்த வழக்கு இணக்கமாக முடிவுறுத்தப்பட்டது.

ஆனால், அரசு தரப்பு கொடுத்த வாக்குறுதியை நடைமுறைப்படுத்தவில்லை, மேலும் குடியேற்றங்கள் நடக்கின்றன என்று தெரிவித்து வழக்கை மீள் விசாரணைக்கு எடுக்குமாறு மனுதாரர்கள் தரப்பில் வழக்கை நடத்திய ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நகர்த்தல் பத்திரம் ஒன்றை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தற்போது சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி மேய்ச்சல் நிலத்தில் சட்டவிரோத குடியேற்றங்கள் தொடர்கின்றமையை ஆதாரப்படுத்தும் படங்கள், ஆவணங்களையும் தற்போதைய நகர்த்தல் பத்திரத்துடன் அவர் சமர்ப்பித்திருக்கின்றார்.

இந்த விடயம் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசர்களான சோபித ராஜகருணா, தம்மிக்க கணேமுல்ல ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும், அரசு தரப்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் விக்ரம் டி ஆப்ருவும் முன்னிலையாகினர்.

நிலைமையைக் கண்டறிந்து பதிலளிக்க அரசு தரப்பு கால அவகாசம் கோரியமையை அடுத்து எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு வழக்கைப் பரிசீலிக்கத் தீர்மானித்து, அதனை நீதியரசர்கள் ஒத்திவைத்தனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பொறுப்புக் கூறாத நாடு

நாட்டின் மருத்துவ - சுகாதார நிலைமை மிக மோசமான கட்டத்தை எட்டி இருப்பது கண்கூடு.

கொவிட் தொற்று ஏற்படுத்திய பொருளாதாரத் தாக்கம், அந்தத் தொற்றினால் அதிகரித்த மருத்துவ - சுகாதார செலவினங்கள், அதை அடுத்து நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, இக்கட்டு போன்ற இன்னோரன்ன சூழ்நிலைகளினால் நாட்டின் சுகாதார சேவை நிலைமை மிக மோசமான கட்டத்தை எட்டி உள்ளது.

மருந்துகள் இல்லை. மருத்துவ உபகரணங்கள், அறுவை சிகிச்சைக்கான கருவிகள், அத்தியாவசிய மருத்துவ சேவைக்கான அடிப்படை மூலப்பொருள்கள் என எல்லாவற்றிற்கும் பற்றாக்குறை,தட்டுப்பாடு. பல ஆஸ்பத்திரிகள் மூடப்படும் நிலைமை. இலவச மருத்துவ வசதி இல்லாமலே போகும் மோசமான கட்டத்தை நோக்கி வைத்தியத்துறை நகர்ந்து இருக்கிறது.

இந்தப் பின்னடைவுகள், சிக்கல்களைப் பயன்படுத்தி ஊழல், மோசடி, சூறையாடல், லஞ்சம் போன்றவையும் தம் கைவரிசையைக் காட்ட மருத்துவத்துறை ஆபத்தான கட்டத்தை எட்டி இருக்கின்றது.

புதிதாகப்பதவியேற்றிருக்கும்சுகாதார அமைச்சர் வைத்தியத்துறையில் தொற்றுக்களைக் களையவும், புற்றுநோய் போல புரையோடி இருக்கும் ஊழல் தரப்புகளை வெட்டி அகற்றவும் தீர்க்கமான நடவடிக்கைகளையும் முடிவுகளையும் எடுக்க வேண்டியவராக இருக்கின்றார்.

பொது சுகாதார நிலைமை மோசமடைந்தமைக்கு சுகாதாரத்துறை நிர்வாகமே நேரடிப் பொறுப்பு என்று பொது கணக்குகளுக்கான நாடாளுமன்ற உபகுழு நேரடியாக முடிவொன்றுக்கு வந்திருக்கின்றது. கணக்காய்வாளர் நாயகத்தினால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் ஊழல்கள், முறைகேடுகள், தவறான கையாளுகை, மோசமான நிர்வாக நடவடிக்கைகள் போன்றவற்றைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்த சுகாதார அமைச்சு தவறி உள்ளது என்ற விடயத்தை மேற்படி பொது கணக்குகளுக்கான நாடாளுமன்ற உபகுழு ஏற்று, சுகாதார அமைச்சின் முகாமைத்துவமே அனைத்துக்கும் காரணம் என்று கூறியுள்ளது.

நாட்டின் மக்களுக்குப் பெரும் பாதிப்புகளையும், பெருமளவு நிதி விரயத்தையும் இந்த நிர்வாகச் சீர்கேடுகள் ஏற்படுத்தி இருக்கின்றமை வெளிப்படையானது.

குற்றத்தின் விவரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இழப்பின் தாக்கம் உணரப்பட்டிருக்கின்றது. மோசமான நிலைமை ஏற்பட்டமைக்குக் காரணமான - பொறுப்பான - தரப்புக்களும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், இந்தப் பெரும் தவறுக்கு யார் மீது நடவடிக்கை எடுக்கப்படபோகின்றது? யாரைத் தண்டிக்கப் போகிறார்கள்? யார் மீதாவது ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா? வாய்ப்புகள் ரொம்பவும் குறைவு.

பொறுப்பு கூறல் நிலைநாட்டப்படுவதேயில்லை என்ற சாதனையின் உச்சத்தில் நாடு இருக்கும் வரை, அதற்கு மீட்சியே கிடையாது. ஊழல், மோசடி, லஞ்ச லாவண்யம், சூறையாடல், மோசமான முகாமத்துவம் என்று எல்லா பின்னடைவுகளிலும் சிக்கி கடைசியில் தோற்றுப் போன நாடாக இலங்கை மாறுவது தவிர்க்க முடியாத நிலைமைதான்..!

# சப்ரகமுவ பல்கலைக்கு உப வேந்தர் நியமனம்




சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் புதிய உப வேந்தராக பேராசிரியர் எம்.சுனில் ஷாந்த நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இன்று முதல் மூன்று வருடங்களுக்கு செல்லுபடியாகும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பேராசிரியர் எம்.சுனில் ஷாந்த, முன்னதாக சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிவரவியல் விஞ்ஞானப் பிரிவில் கடமையாற்றியிருந்தார்.

# மீள்குடியேறிய சிங்கள மக்களுக்கு நீதி கோரி வவுனியாவில் போராட்டம்





(வவுனியா நிருபர்)

வடக்கு – கிழக்கில் போரின்போது வெளியேறி தற்போது மீள்குடியேறியுள்ள சிங்கள மக்களுக்கு நீதி கோரி வவுனியா மாவட்ட செயலக பிரதான வாயிலின் முன்பாக நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன நேற்று வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு வருகை தந்திருந்த நிலையிலேயே வவுனியா, போகாஸ்வேவ பகுதியைச் சேர்ந்த மக்களால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கில் மீள்குடியேறிய தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு பல அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள போதிலும் மீள்குடியேறியுள்ள சிங்கள மக்களுக்கு அரசு எவ்வித அடிப்படை வசதிகளையும் மேற்கொள்ளவில்லை என்று போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்ட செயலக பிரதான வாயிலின் அருகே போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மாவட்ட செயலகத்தினுள் உள்நுழையாதவாறு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. மாவட்ட செயலகத்துக்கு வருகை தந்த பிரதமர் தினேஷ் குணவர்த்தன, மாவட்ட செயலகத்தின் மாற்றுப் பாதையூடாக வருகை தந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2023**

"நீண்ட காலத்தின் முன்பு ஒருவர் மரம் ஒன்றினை நாட்டியதன் பயனாகவே இன்று இன்னொருவர் அம்மரத்தின் நிழலில் அமர்ந்துள்ளார்."
- வாரன் பஃவெற் (அமெரிக்கத் தொழிலதிபர்)

# வீதியைப் புனரமைத்துத் தருமாறு வேண்டி வீதியை மறித்து கவனவீர்ப்புப் போராட்டம்




**- கே.வசந்தரூபன் -**

வவுனியா, பண்டாரிக்குளம் பிரதான வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரி அப்பகுதி மக்களால் நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.








பல வருடங்களாக குறித்த வீதி எவ்வித புனரமைப்பும் இன்றி காணப்படுவதுடன், தற்போது குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் பாதையைப் பயன்படுத்துவதில் தாம் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுப்பதாகத் தெரிவித்தமையுடன் உடனடியாக வீதியைச் செப்பனிட்டுத் தருமாறும் போராட்டக்காரர்கள் கோரினர்.

வவுனியா, பண்டாரிக்குளம் விபுலானந்த கல்லூரி முன்பாக ஆரம்பமான இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் பண்டாரிக்குளம் பிரதான வீதியூடாக ஊர்வலமாகச் சென்று ரயில் நிலைய பிரதான வீதியைச் சென்றடைந்தது அங்கு சிறிது நேரம் வீதியை வழிமறித்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள், “3 ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலை அமைந்துள்ள பிரதான வீதியை உடனே புனரமைப்புச் செய், ஏமாற்றாதே ஏமாற்றாதே இனியும் ஏமாற்றாதே, மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவரே பதில் சொல் நிதி எங்கே?, வேண்டும் வேண்டும் நீதி வேண்டும், நான்கு கிராம சேவையாளர் பிரிவு மக்கள் துன்பப்படுவது உங்களுக்குத் தெரியவில்லையா?” போன்ற பல்வேறு வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந்தனர்.


Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.05, 19th Lane Colombo 03.
- No. 154, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

# தெலுங்கானா சட்டப்பேரவைத் தேர்தலில் பா.ஜ.க. 2 சதவீத வாக்குகளையே பெறும்

## - ராகுல் காந்தி தெரிவிப்பு

தெலுங்கானா சட்டப்பேரவைத் தேர்தலில் பா.ஜ.க. 2 சதவீத வாக்குகளையே பெறும் என்றும் அங்கு பாரத் ராஷ்ட்ர சமிதிக்கும், காங்கிரஸ் கட்சிக்கும் இடையேதான் போட்டி என்றும் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

தெலுங்கானா சட்டப்பேரவைத் தேர்தல் எதிர்வரும் 30 ஆம் திகதி ஒரே கட்டமாக நடைபெற உள்ளது. வாக்கு எண்ணிக்கை டிசம்பர் 3 ஆம் திகதி நடைபெற உள்ளது.

தேர்தலை முன்னிட்டு தெலுங்கானா மாநிலத்தில் தேர்தல் பிரச்சாரம் சூடுபிடித்துள்ளது. தெலங்கானாவின் நாகர்கர்னூலில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் காங்கிரஸ் முக்கிய தலைவர் ராகுல் காந்தி உரையாற்றினார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தத் தேர்தல் என்பது முதல்வராக இருக்கும் கே.சந்திரசேகர ராவுக்கு விடை கொடுக்கும் தேர்தல். முதலில் அவரை வழியனுப்ப வேண்டும். அதன்பிறகு, தெலுங்கானா மக்களிடம் இருந்து அவர் அடித்த கொள்ளை குறித்து கேள்வி எழுப்ப வேண்டும். மக்களிடம் இருந்து அவர் கொள்ளையடித்த பணத்தை மக்களுக்கு திருப்பித் தர வேண் டும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். பிரதமர் நரேந்திர மோடியைப் போன்று நான் வெறும் வாக்குறுதி மட்டும் கொடுக்கும் நபர் அல்ல. நான் ஒரு வாக்குறுதி அளித்தால், அதை நிறைவேற்றுவேன்.

இந்த தேர்தலைப் பொறுத்தவரை ஒரு பக்கம் சந்திரசேகர ராவ், அவரது குடும்பம், அவரது ஊழல் அமைச்சர்கள் இருக்கிறார்கள். மறுபக்கம், தெலங்கானாவின் ஏழைகள், விவசாயிகள், காங்கிரஸ் கட்சி ஆகியவை இருக்கின்றன. நமது கனவு, தெலங்கானாவை இம்மாநில மக்கள் ஆள வேண்டும் என்பதுதான். ஆனால், தற்போது ஒரு மன்னரும், அவரது குடும்பமும்தான் தெலுங்கானாவை ஆள்கிறது.



இந்த தேர்தல் பாரத் ராஷ்ட்ர சமிதிக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் இடையேயானது. உண்மை என்னவென்றால், பாரத் ராஷ்ட்ர சமிதியோடு பா.ஜ.கவும், ஒ.வை.சி. கட்சியும் ஒன்று சேர்ந்துள்ளது. பா.ஜ.கவைப் பொறுத்தவரை எதிர்க் கட்சிகளுக்கு எதிராக மத்திய புலனாய்வு அமைப்புகளை ஏவுவது வாடிக்கை.

எனக்கு எதிராக 24 வழக்குகள் உள்ளன. மக்களவையில் இருந்து நான் தகுதி நீக்கம் செய்யப்பட்டேன். எனக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரபூர்வ அரசு இல்லம் என்னிடம் இருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது. நானும் மகிழ்ச்சியோடு அதனை கொடுத்துவிட்டேன். என்னைப் பொறுத்தவரை ஒட்டுமொத்த இந்தியாவும், தெலுங்கானாவுமே எனது இல்லம்தான். பா.ஜ.கவைப் பொறுத்தவரை அவர்களுக்கு யார் எதிரியோ அவர்களைத்தான் குறிவைப்பார்கள். ஆனால், தெலுங்கானா முதல்வர் கே.சந்திரசேகர ராவ் மீது எந்த வழக்கையும் அவர்கள் தொடுக்கவில்லை. ஏனெனில், பிரதமர் மோடியும், சந்திரசேகரராவும் இணைந்து செயல்படுகிறார்கள்.

இத்தகைய சுழலில், இங்கு வரும் பா.ஜ.க. தலைவர்கள், பா.ஜ.க. வெற்றி பெற்றால் பிற்படுத்தப்பட்ட ஒருவர்தான் முதல்வராக வருவார் என்கிறார்கள்.

அவர்கள் இங்கே 2 சதவீத வாக்குக் களைத்தான் பெறுவார்கள். அப்படி இருக்கும்போது, அவர்களால் எவ்வாறு இங்கே ஆட்சி அமைக்க முடியும்? மகாராஷ்டிரா, ராஜஸ்தான், அசாம், உத்தரப் பிரதேசம் என எங்கெல்லாம் காங்கிரஸ் கட்சி போட்டியிடுகிறதோ அங்கெல்லாம் ஒ.வை.சியின் கட்சி வந்துவிடும்.

அவர்கள், பா.ஜ.கவிடம் பணத்தை வாங்கிக் கொண்டு, அக்கட்சியின் வேட்பாளர்களுக்கு ஆதரவாக செயல்படுவார்கள். இதை தெலுங்கானா மக்கள் மனதில் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# நடிகை கவுதமியின் முறைப்பாட்டின் எதிரொலி: அழகப்பனின் வீட்டில் பொலிஸார் சோதனை

நடிகை கவுதமியிடம் நிலத்தை மோசடி செய்தார் என்று முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில், சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அருகே கோட்டையூரில் உள்ள அழகப்பன் வீட்டில் சென்னை மத்திய குற்றப்பிரிவு பொலிஸார் சோதனை நடத்தினர்.

தனக்குச் சொந்தமான பல கோடி ரூபா மதிப்பிலான நிலத்தை, பா.ஜ.கவைச் சேர்ந்த கோட்டையூர் அழகப்பன் மற்றும் அவரது குடும்பத்தினர் மோசடியாக விற்பனை செய்துள்ளனர் என சென்னை பொலிஸ் ஆணையர் அலுவலகத்தில் நடிகை கவுதமி புகார் அளித்தார்.

அதன்பேரில், சென்னை மத்திய குற்றப்பிரிவு பொலிஸார் வழக்கு பதிவு செய்து, விசாரித்து வருகின்றனர். இந்த நிலையில், கோட்டையூரில் உள்ள அழகப்பனின் வீட்டில் சென்னை மத்திய குற்றப்பிரிவு உதவி ஆணையர் ஜான் விக்டர் தலைமையிலான பொலிஸார் நேற்று சோதனை மேற்கொண்டனர்.



அப்போது, அங்கிருந்த சில ஆவணங்களை பொலிஸார் கைப்பற்றி, தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

# இஸ்ரேலுக்கு எதிராக களமிறங்கியுள்ள ஹவுதி



இஸ்ரேலுக்கு எதிராக லெபனானின் ஹிஸ்புல்லா இயக்கம் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில், யேமனில் செயற்படும் ஹவுதி அமைப்பினரும் ஏவுகணை தாக்குதலை நடத்தியுள்ளனர்.

ஏவுகணை தாக்குதலுக்கு யேமனின் ஹவுதி போராட்டக்காரர்கள் பொறுப்பேற்றுள்ளனர்.

ஹவுதி அமைப்பினர் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை ஏவி இஸ்ரேல் மீது தாக்குதலை நடத்தியுள்ளனர்.

ஹவுதி இராணுவ செய்தித் தொடர்பாளர் யாஹ்யா சரியா அவரது சமூக வலைத்தள பக்கத்தில். பலஸ்தீன சகோதரர்களுக்கு ஆதரவான எங்கள் தாக்குதல் தொடரும் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, காசா எல்லையில் அமைக்கப்பட்டு இருந்த அகதிகள் முகாமில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 50 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது. மேலும் 150 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

இந்த தாக்குதல் குறித்து வெளியான வீடியோவில் இடிந்து விழுந்த குடியிருப்பு பகுதிகளின் இடிபாடுகளில் இருந்து உயிரிழந்தோர் சடலங்கள் மீட்கப்படும் காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

ஹமாஸ் தெரிவித்து இருக்கும் இந்த குற்றச்சாட்டு குறித்து இஸ்ரேல் தரப்பில் இதுவரை எந்த பதிலும் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையே ஒக்டோபர் 7 ஆம் திகதி முதல் போர் இடம்பெற்று வருகின்றது. காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 8 ஆயிரத்து 306 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதில் 3,457 குழந்தைகள், 2,136 பெண்கள் மற்றும் 480 முதியவர்கள் அடங்குவார்கள்.

அத்துடன் 31 ஊடகவியலாளர்கள் போரில் உயிரிழந் துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், 21 ஆயிரத்து 48 பேர் காயம டைந்துள்ளனர். 1,050 குழந்தைகள் உட்பட 1,950 பேர் காணமல் போயுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

# காசா போர் விவகாரத்தில் பின்வாங்குகிறது ஈரான்!

காசா மீதான தரைவழி தாக்குதலை இஸ்ரேல் ஆரம்பித்தவுடன், 'சிவப்பு எல்லையை இஸ்ரேல் தாண்டிவிட்டது' என ஈரான் பகிரங்க அறிவிப்பொன்றை விடுத்திருந்தது.

தற்போது சிரியாவிலும், லெபனானில் உள்ள ஹமாஸின் தளங்கள் மீது இஸ்ரேல் பாரியளவான குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் இஸ்ரேல் மீது இராணுவ நடவடிக்கைகளையும், தாக்குதல்களையும் ஈரான் ஏன் முன்னெடுக்கவில்லை என கேள்வி எழுந்துள்ளது.



இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்துவதற்கு ஈரானுக்கு ஆயிரம் கரணங்கள் இருந்தும், ஈரான் பின்வாங்கும் நிலை குறித்து சந்தேகம் எழுந்துள்ளது என போரியல் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் அவ்வாறானதொரு தாக்குதல் முன்னெடுக்கப்பட்டால், ஈரானுக்கு கிடைக்கும் சாதகமான விடயங்களை விட பாதிப்புக்கள் பலமடங்கு அதிகமாக காணப்படும் எனவும் அவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.



# இலங்கை வந்த இந்திய நிதி அமைச்சர் கண்டியில் தலதா மாளிகையில் வழிபாடு



உத்தியோகபூர்வ விஜயம் மேற் கொண்டு நேற்று இலங்கை வந்துள்ள இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதா ராமன் கண்டியில் தலதா மாளிகை யில் வழிபாடுகளில் ஈடுபட்டமையுடன், மகாநாயக்க தேரர்களையும் சந்தித்து ஆசி பெற்றார்.

மல்வத்து பிரிவின் மகாநாயக்க தேரர் திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரரை சந்தித்து ஆசி பெற்ற நிர்மலா சீதாராமன், இலங்கை மக்களுக்காக இந்தியப் பிரதமர் மூலம் வழங்கப்பட்ட உதவிகள் மற்றும் இந்திய மக்களுடன் இலங்கை கொண்டுள்ள வலுவான தொடர்பையும் வலியுறுத்தினார்.

இந்தியாவுடனான ஆழமான கலாசார உறவுகளை திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் இதன் போது நினைவுக்கூர்ந்தமையுடன், இந்த உறவுகள் மேலும் வலுவடைய வேண்டும் என வலியுறுத்தினார்.

இலங்கையில் ஏற்பட்ட பொருளா தார நெருக்கடியின் போது இந்தியா வழங்கிய பொருளாதார உதவிகளுக்கு நன்றி தெரிவித்த மகாநாயக்க தேரர், இலங்கையின் நம்பிக்கைக்குரிய நண்பன் என்ற வகையில், பொருளா தார நெருக்கடியான தருணத்தில் இலங்கைக்கு உதவுவதற்கு முதலில் கைகோர்த்தது இந்தியாவே எனவும் குறிப்பிட்டார்.

இந்திய நிதியமைச்சர் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் வரக்கா கொட ஸ்ரீ ஞானரத்ன தேரரையும் சந்தித்து ஆசி பெற்றார்.

இலங்கையின் மத வழிபாட்டுத் தலங்களின் சூரிய மின்மயமாக்கல் திட்டத்தை மானிய அடிப்படையில் இந்தியா முன்னெடுக்க உள்ளமை தொடர்பில் மல்வத்து மற்றும் அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களுக்கு இந்திய நிதி அமைச்சர் இந்தச் சந்திப்புக்களில் தெளிவுபடுத்தினார்.

இதற்கான ஒப்பந்தம் இன்று ஜனாதி பதி ரணில் விக்க்ரமசிங்க முன்னி லையில் கொழும்பில் கைச்சாத்திடப்பட உள்ளதாகவும் இந்திய நிதி அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

# இந்திய நிதியமைச்சர் திருமலைக்கும் விஜயம்



- ஹஸ்பர -

நேற்று கொழும்பு வந்து சேர்ந்த இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதா ராமன் கிழக்கு மாகாண ஆளுநரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமா னின் அழைப்பின் பேரில் கிழக்கு மாகா ணத்திற்கும் நேற்று விஜயம் செய்தார்.

திருகோணமலை விமான தளத் தில் ஹெலிக்கொப்டரில் வந்திறங்கிய நிர்மலா சீதாராமனை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க. ஆளுநரின் செயலாளர் எல்.பி. மத நாயக்க, ஆளுநரின் பிரத்தியேக செய லாளர் எல்.எல்.அனில் விஜயஸ்ரீ, மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டி யாய்ச்சி மற்றும் சுற்றுலா பணியக தவி சாளர் ஏ.பி.மதனவாசன் ஆகியோர் வரவேற்றனர்.

இன்று திருகோணமலையில் இந்திய வங்கிக் கிளை ஒன்றைத் திறந்து வைக் கும் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதா ராமன், இன்று காலை திருக்கோணேஸ் வரம் கோவிலில் வழிபாடு செய்வார்.

அதன் பின்னர் ஹெலிக்கொப்டரில் கொழும்பு புறப்படும் அவர் மதியம் ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோ ரைச் சந்திப்பார்.

மாலையில் இ.தொ.கா. நடத்தும் "நாம் – 200" நிகழ்வில் அவர் பங்கு பற்றுவார்.

நாளை காலையில் கொழும்பிலிருந்து ஹெலிக்கொப்டரில் வடக்கே புறப்படும் அவர் யாழ்ப்பாண நிகழ்ச்சிகளை நாளை முடித்துக் கொண்டு பலாலியில் இருந்து விமானம் மூலம் சென்னை திரும்புவார்.



# சீன ஆய்வுக் கப்பலின் பிரசன்னம் அமெ., இந்தியா கடும் அதிருப்தி!

சீனாவின் ‘ஷியான் 6’ கப்பலுக்கு திங்கள் முதல் கடல் ஆய்வுகளை நடத்த இலங்கை வெளிவிவகார அமைச்சு அனுமதி வழங்கியுள்ள நிலையில் அமெரிக்காவும் இந்தியாவும் இதற்குக் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளன.

இலங்கையின் பாதுகாப்புத் தொடர்பான விடயங்களில் சீனா தொடர்ந்தும் தனது அத்துமீறலையும், ஆதிக்கத்தையும் செலுத்தி வருகிறது.

இதற்கிடையே இந்தியா மற்றும் அமெரிக்கா எழுப்பிய எதிர்ப்புகளுக்கு மத்தியில் சீன ஆய்வுக் கப்பலான ‘ஷியான் 6’ கடந்த 23ஆம் திகதி கொழும்பை வந்தடைந்தது.

‘ஷியான் 6’ கப்பல் இரண்டு நாள் ஆராய்ச்சியை இலங்கை கடற்கரையில் திங்கள் முதல் தொடங்கி உள்ளதாக இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் மேற்குக் கரையோரப் பகுதியிலும், இலங்கையின் தேசிய நீர்வள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (நாரா) மற்றும் ருஹுணு பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து இந்த ஆய்வு மேற்கொள்ளப்படும் என்று கொழும்பில் உள்ள வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே கடந்த 2020ஆம் ஆண்டு டிசம்பரில் சீனாவின் கடல் சார் ஆராய்ச்சிக் கப்பல்களில் ஷியான் 6 என்ற ஆராய்ச்சிக் கப்பல் சேர்க்கப்பட்டது.

புவி மற்றும் இயற்பியல் ஆய்வில் கவனம் செலுத்தும் நாட்டின் முதல் அறிவியல் ஆராய்ச்சிக் கப்பலாகக் கருதப்படும் இது சுமார் 80 நாள்களுக்கு கடலில் இயங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

13 ஆராய்ச்சிக்குழுக்கள், 28 ஆராய்ச்சி திட்டங்களுடன், 12 ஆயிரம் கடல் மைல்கள் முழுவதும் பயணம் செய்து ஆய்வு பணிகளை செய்ய திட்டமிட்டுள்ளது.

சீனக் கப்பல்கள் இலங்கைக்கு வருவது தொடர்பாக இந்தியாவும் அமெரிக்காவும் கவலை தெரிவித்திருந்தன. இது தொடர்பாக இந்த மாத தொடக்கத்தில் பெய்ஜிங்கில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடத்திய பேச்சுவார்த்தையிலும் இந்த விவகாரம் குறித்து பேசப்பட்டது.

கடந்த செப்டம்பரில், இந்தியாவின் உள் நாட்டில் கட்டப்பட்ட முதல் போர்க் கப்பலான ‘ஐ.என்.எஸ். டெல்லி’ இலங்கைக்கு நல்லெண்ணப் பயணத்தை மேற்கொண்டது.

கடந்த வாரம், கொரிய கடற்படையின் ரோக்ஸ், குவாங் கேட்டோ தி கிரேட் மற்றும் சமீபத்தில், ஜப்பான் கடல் சார் நவீன போர்க்கப்பல் இலங்கையின் வடகிழக்கு கரையோரத்தில் அமைந்துள்ள திருகோணமலை துறைமுகத்துக்கு வந்தடைந்தது குறிப்பிடத்தக்கது.

சீனக் கப்பல்களின் வருகை குறித்து இந்தியா பலமுறை கவலை தெரிவித்து வரும் நிலையில், வெளிநாட்டுக் கப்பல்களின் வருகைக்கு நிலையான செயல்பாட்டு நடைமுறை பின்பற்றப்படும் என்று இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சீனாவின் தொடர் ஆதிக்கத்தின் முக்கிய நடவடிக்கையாக இலங்கையின் கடல் வளங்களை ஆராய சீன ஆராய்ச்சி கப்பலை அனுப்பி வைத்துள்ளது.

இது, இந்தியா மற்றும் அமெரிக்க நாடுகள் இலங்கைக்கு அளித்து வரும் நட்புறவில் விரிசலை ஏற்படுத்துமா என்ற கேள்வியையும் ஏற்படுத்தி உள்ளது.

ஷி யான் 6 என்ற சீன ஆய்வுக் கப்பலுக்கு, அமெரிக்கா மற்றும் இந்தியாவின் ஆட்சேபனைகளை மீறியே இலங்கை கடல் ஆய்வுகளை நடத்த அனுமதி வழங்கியுள்ளது.

சீனாவின் ஆராய்ச்சிக் கப்பலுக்கு இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ள இலங்கை அனுமதி வழங்குவது இரண்டு வருடங்களில் இது இரண்டாவது தடவையாகும்.

இந்தக் கப்பல் கொழும்பு பெந்தர கடற்பரப்பில் ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக நாராவின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி கமல் தென்னகோன் தெரிவித்துள்ளார்.

# அமெ. விசா மறுக்கப்பட்ட சரத் வீரசேகரா சீனாவைப் பாராட்டிப் புகழாரம் சூட்டுகிறார்

அமெரிக்காவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்குபற்ற செல்வதற்கு விசா மறுக்கப்பட்ட ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, ஆசியாவின் தவிர்க்க முடியாத மற்றும் நம்பகமான நண்பன் என சீனாவை பாராட்டியுள்ளார்.

அண்மையில் சீனாவில் நடைபெற்ற ‘BOAO’ உச்சிமாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர்இவ்வாறு பாராட்டியுள்ளார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் –

ஆசிய நாடுகளுக்கு இடையேயான பிணைப்பை மேற்கத்திய உலகம் ஒருபோதும் புரிந்து கொள்ளாது.

இந்தப் பிணைப்பு வர்த்தகம் மற்றும்



பௌத்த உறவுகள் மூலம் வளர்க்கப்படுகிறது. சீனா ஆசியாவின் தவிர்க்க முடியாத மற்றும் நம்பகமான நண்பராக இருந்து வருகிறது.

பாதுகாப்புச் சபையில் நிரந்தர அங்கத்துவ நாடான சீனா, மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு தொடர்ந்து அளித்து வரும் ஆதரவிற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

உலகின் மிக இரக்கமற்ற பயங்கரவாத அமைப்பை நாங்கள் தோற்கடித்த போது மேற்கத்திய நாடுகளால் இழிவு படுத்தப்பட்டோம். ஆனால் சீனா எப்போதும் எங்களுக்கு ஆதரவாக நிற்கிறது. – என்றும் அவர் கூறியுள்ளார்.

அண்மையில், நாடாளுமன்றத் துறை சார் மேற்பார்வைக் குழுக்களுக்குத் தலைமை தாங்கும் இலங்கை எம்.பி.க்கள் அமெரிக்காவில் நடைபெற்ற நிழ்கவுகளில் பங்குபற்றினர்.

இதற்காக சரத் வீரசேகர எம்.பி அமெரிக்கா செல்வதற்கு விசாவுக்கு விண்ணப்பித்திருந்தபோதிலும்அதற்கானஅனுமதி மறுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# ஆஸ்பத்திரிக்குச் சென்ற தாய் வழியில் யானை தாக்கிச் சாவு!

தனது மகனுடன் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்குச் சென்று கொண்டிருந்த தாய் ஒருவர் காட்டு யானை தாக்கியதில் உயிரிழந்துள்ளார் எனத் திறப்பனை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் திறப்பனை, நிரவிய பகுதியைச் சேர்ந்த லலிதா குமாரி சந்திரலதா என்ற 50 வயதுடைய பெண் ஆவார்.

இவர் தனது 31 வயது மகனுடன் மோட்டார் சைக்கிளில் அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காக சென்று கொண்டிருந்த போது வீதியில் நின்ற காட்டு யானையால் தாக்கப்பட்டுள்ளார்.

காயமடைந்த நிலையில் அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அவர் கொண்டு செல்லப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மகனுக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திறப்பனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சம்மாந்துறை, மாவடிப்பள்ளி ஆற்றில் முதலைகளின் தொல்லை அதிகரிப்பு

- அஸ்ஹர் இப்றாஹிம் -



சம்மாந்துறை, மாவடிப்பள்ளி ஆற்றிலும் அதை அண்டிய பிரதேசங்களிலும்,வயல் பிரதேசங்களிலும் மற்றும் சாய்ந்தமருது கரைவாகு ஆற்றுப் பிரதேசங்களிலும் பகலிலும் இரவிலும் முதலைகளின் தொல்லை அதிகரித்து வருவதால் பிரதேச மக்கள் அச்சத்துடன் வாழ வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்தின் வேறு பிரதேசங்களில் வாழ்ந்த முதலைகள் அண்மையில் பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக இப்பிரதேசங்களிலுள்ள ஆறுகளிலும் குளங்களிலும் வாழ்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டுள்ளன.

பகல் வேளைகளில் ஆற்று ஓரங்களில் திரியும் முதலைகள் ஆடுகள் மற்றும் கோழிகளை பிடித்து உண்பதால் இவற்றை வளர்த்து அதன் மூலம் தமது ஜீவனோபாயத்தை நடத்தும் வறிய மக்கள் பலவிதமான பொருளாதார நஷ்டத்தை அனுபவித்து வருகின்றனர்.

தற்போது பெரும்போக வேளாண்மைச் செய்கை ஆரம்பித்துள்ள நிலையில் ஆற்று ஓரங்களிலுள்ள வயல்களில் இரவு வேளைகளில் வயல் நிலங்களிலுள்ள இளம் பயிர்களுக்கு முதலைகளின் நடமாட்டம் பெரும் சேதத்தை உண்டுபண்ணுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

# யாழ்ப்பாணத்தில் இந்திய நிதி அமைச்சரை வடக்கு மீன்வர் தரப்பினர் சந்திக்க முயற்சி




யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகின்ற இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாரமனைச் சந்தித்து அவருக்குத் தாங்கள் எதிர்நோக்கும் அவலங்கள் தொடர்பில் விளக்கமளிக்க உள்ளனர் என யாழ்ப்பாண கிராமிய கடற்றொழில் சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு நாளை வருகை தருகின்ற இந்திய மத்திய நிதி அமைச்சரைச் சந்தித்து இந்திய மீனவர்களினால் எமது வளங்கள் அழிக்கப்படுகின்றமை தொடர்பில் அமைச்சருக்கு விரிவாக விளக்கமளிக்கவுள்ளோம்.

எதிர்வரும் காலங்களில் தமிழகத்திற்குச் சென்று தமிழக முதலமைச்சர் மற்றும் தமிழக மீனவர்ளுக்கு எங்களுடைய அவலங்களை எடுத்துரைக்கவுள்ளோம். – என அவர் மேலும் தெரிவித்தார்.



# யாழ் பல்கலையில் நேற்று நினைவுத்தூபி துப்பரவு

(பிரபாகரன் டிலக்சன்)

கார்த்திகை மாதத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மாவீரர் நினைவுத்தூபி துப்பரவு செய்யப்பட்டு ஈகை சுடர் ஏற்றப் பட்டது.


மாவீரர்நாள் வாரம் இம் மாதம் கடைப் பிடிக்கவுள்ள நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மாவீரர் நினைவுத்தூபியை துப்பரவு செய்யும் பணிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றைய தினம் ஈடுபட்டனர்.

அதன்பின் தூபியில் ஈகைச்சுடர் ஏற்றி மாணவர்கள் மரியாதை செலுத்தினர்.

மாவீரர் நாள் நினைவேந்தல்கள் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தொடர்சியாக இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.














# ஆலங்குளம் துயிலும் இல்லத்திலும் நேற்று அஞ்சலியுடன் ஆரம்பித்தது சிரமதானப் பணி

**(சண்முகம் தவசீலன்)**

ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்திலும் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு சிரமதான பணி நேற்று ஆரம்பமானது.

தமிழ் மக்களுக்கான உரிமைப் போரில் தமது உயிர்களை ஈகம் செய்த மாவீரர்களைப் போற்றி வணங்கும் மாவீரர் நாள் இவ்வாண்டும் நவம்பர் 27 ஆம் திகதி தமிழ்மக்களால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இவ்வாண்டும் மாவீரர் நாள் நிகழ்வுகளை முன்னெடுக்கத் தமிழர் தாயகப் பகுதிகள் மாத்திரமின்றி தமிழ் மக்கள் வாழும் தேசமெங்கும் தயாராகி வருகிறது.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களும் தயாராக ஆரம்பித்துள்ளது.

முல்லைத்தீவுமாவட்டத்தில்இலங்கை இராணுவத்தின் 57 ஆவது படைப்பிரிவினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இவ்வாண்டுக்கான மாவீரர் நாள் நிகழ்வுகள் செய்வதற்கான சிரமதான பணிகள் ஆலண்க்குளம் மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழுவினரால் நேற்று மாலை ஆரம்பிக்கப்பட்டது.

முன்னதாக மாவீரர்களுக்கு ஈகைச் சுடர் ஏற்றி, அகவணக்கம் செலுத்தி, மலர்வணக்கம் இடம்பெற்றதைத் தொடர்ந்து சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன

இவ்வாண்டும் கார்த்திகை 27 மாவீரர் நாள் உணர்வு பூர்வமாக இடம்பெறும் எனவும், அனைத்து மாவீரர் பெற்றோர், உறவுகளையும் கலந்துகொள்ளுமாறும் முன்னாயத்த பணிகளிலும் ஒத்துழைப்பு வழங்குமாறும் பணிக்குழுவினர் தெரிவித்தனர்





# இன்றைய ராசி பலன்கள் - 02.11.2023




இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.உங்கள் நடவடிக்கைகளில் கவனம் தேவை.இன்று உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

உங்கள் சகபணியாளர்களுடன் சச்சரவுகள் ஏற்படலாம்.பொறுமையுடன் இருந்து செயலாற்றவும்.

தொடர்பாடலில் உள்ள குறைபாடு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். புரிந்துணர்வு மூலம் இதனை தவிர்க்கலாம்.

இன்று பணப் பற்றாக்குறை காணப்படும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிக்க கடன் வாங்க நேரலாம்.

உங்களுக்கு கால்வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது நல்லது.




இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும்.உரையாடலின் போது கவனமாக இருங்கள்.பயணங்கள் செய்ய வாய்ப்புள்ளது.

பணியிடத்தில் சிறப்பான பலன்களைக் காணலாம்.உங்களின் சிறிய முயற்சிகள் பெரும் வெற்றியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் சில பயனுள்ள விஷயங்களைப் பேசுவீர்கள். என்றாலும் பேச்சு ஆக்கபூர்வமாக இருக்கும் வகையிலும் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்கும் வகையிலும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று கணிசமான தொகை உங்களிடம் காணப்படும். உங்கள் குடும்பத்தோடு பயணம் செல்ல நேரலாம். அதற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று நீங்கள் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும்.இன்றைய நாளை சிறப்பாக திட்டமிடவேண்டும்.அது உங்களுக்கு சிறந்த வழிகாட்டியாக அமையும்.

உங்கள் பணிகளை திறம்பட செயலாற்றுவீர்கள். அதே சமயத்தில் வேலையின் தொடக்கத்தில் சில தடைகளை எதிர்கொள்வீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. துணையிடம் அன்பான உரையாடல்களில் ஈடுபடலாம்.

உங்கள் தேவைகளுக்கு கடன் வாங்க நேரலாம். அதன் மூலம் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

உங்கள் தோள்களில் வலி ஏற்படலாம். செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. முறையான உணவு முறை மேற்கொள்ளவும்.




இன்று நீங்கள் சுறுசுறுப்புடன் காணப்படுவீர்கள்.பொறுப்புகள் காணப்படும். இன்று செய்யும் செயல்களை சரியாக திட்டமிட்டுச் செய்தால் நீங்கள் வெற்றி காணலாம்.

பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்வதில் இன்று மும்மரமாக காணப்படுவீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாளாக இருப்பதாக உணர்வீர்கள். உங்கள் துணையிடம் உங்கள் நேரத்தை பகிர்ந்து கொள்வீர்கள்.

குடும்பத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம். பணம் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு.

உங்கள் குழந்தைகளுக்கு ஆரோக்கிய பிரச்சினை காணப்படும். அதற்காக செலவு செய்ய நேரும்.




இன்றைய நாள் சற்று மந்தமாக காணப்படும்.குழப்பங்களும் கவலைகளும் நிறைந்திருக்கும்.இன்று சிறந்த பலன்கள் கிடைப்பதற்கு உகந்த நாள் அன்று.

இன்று பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணி நிமித்தமான பயணம் இன்று காணப்படும். உங்கள் வேலைகளை திட்டமிடுவது இன்று முக்கியம்.

இன்று உணர்ச்சி வசப்படுவீர்கள். பாதுகாப்பின்மையை உணர்வீர்கள். உங்கள் உணர்ச்சிகளை கட்டுபடுத்த வேண்டும்.

நிதி நிலைமை நீங்கள் எதிர்பார்த்தது போலன்றி எதிர்மறையான பலன்களைத் தரும்.

உங்களிடம் காணப்படும் பதட்டம் காரணமாக உங்களுக்கு கால் வலி ஏற்படலாம்.




இன்று சாதகமான நாள்.உங்களின் முயற்சி சிறியதாக இருந்தாலும் வெற்றி காண்பீர்கள்.உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

இன்று பணியிடத்தில் திருப்திகரமான நிலை இருக்கும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணம் மிகுதியாக காணப்படும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும்.

இன்று சிறந்த முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று அனுகூலமான நாளாக இருக்கும். இன்று நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். இன்று பணியில் சவால்களும் போட்டிகளும் நிறைந்து காணப்படும்.இந்த சவால்களை திறமையாக சமாளிக்க வேண்டிய நிலை காணப்படும்.

நிதி வளர்ச்சி சீராக இருக்கும். சேமிப்பு பழக்கத்தை வளர்த்துக்கொள்வது நல்லது.

இன்று சிறந்த முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று வருவீர்கள்.




இன்று நீங்கள் பயணங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.புதிய முயற்சிகள் எடுத்து அதில் வெற்றியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மன நிலையில் இருப்பீர்கள்.

இன்று பணி நிமித்தமான பயணம் காணப்படும். உங்கள் பணியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். விடாப்பிடியான எண்ணம் கொண்டு எந்த முயற்சியும் செய்யாதீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். உறவில் நல்லிணக்கம் இருக்கும்.

இன்று அதிர்ஷ்டம் காணப்படும். நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். உணவில் கவனம் செலுத்த வேண்டும். உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 02.11.2023




இன்று மந்தமான நாள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு உகந்த நாளாக அமையாது. முக்கியமான முடிவுகள் எடுப்பதை இன்று தள்ளிப் போட வேண்டும்.

உங்கள் பணியின் தரம் பாராட்டத் தக்க வகையில் இருக்காது. பணியிடத்தில் உங்கள் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

உறவில் மகிழ்ச்சியை பராமரிக்க அனுசரித்து நடந்து கொள்ளவும். இதனால் உறவில் நல்லிணக்கத்தை தக்க வைக்க முடியும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படாது. இன்று வரவும் செலவும் சேர்ந்து காணப்படும்.

தோல் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படலாம். எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்கவும்.




இன்ற உங்கள்ஆற்றலையும் வலிமையையும் உணரும் நாள். இன்று உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாகச் செய்வீர்கள். நீங்கள் பணிகளை திறம்பட கையாண்டு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.

இன்று இருவரும் மனம் பொருந்தி ஒற்றுமையுடன் காணப்படுவீர்கள். உங்கள் காதலின் எதிர்காலத்தை பற்றி கலந்தாலோசிபீர்கள்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. நீங்கள் எதிர்பாராத வகையிலிருந்து பணம் கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு உகந்த நாள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கான முக்கியமான முடிவுகளை இன்று நீங்கள் எடுக்கலாம்.

உங்கள் பணிகளை திறம்பட செயலாற்றுவீர்கள். புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று காதலில் முழு திருப்தி உண்டாவதற்கு உகந்த நாள். இன்று காதலில் புதிய அத்தியாயத்தை தொடங்குவீர்கள்.

நீங்கள் தொழில் செய்பவராக இருந்தால் இன்று அதிக லாபம் கிடைக்கும்.

நீங்கள் ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். உடற்பயிற்சி மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.




ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு மகிழ்ச்சியையும் மன ஆறுதலையும் தரும்.

பணி நிமித்தமான பயணங்கள் இன்று காணப்படும். பணியில் இன்று மும்மரமாக காணப்படுவீர்கள்.

இன்று காதலுக்கு பொருத்தமான நாளாக உணர்வீர்கள். உங்கள் காதலை உங்கள் தந்தையிடம் கூறுவீர்கள். அது உங்களுக்கு சாதககமாக இருக்கும்.

ஏழைகளுக்கு தொண்டு செய்து அவர்கள் ஆசி பெறுவதன் மூலம் உங்களுக்கு நற்பலன்கள் கிடைக்கும். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.









# நியூஸிலாந்தை பந்தாடிய தென்னாபிரிக்கா அணி!

நியூஸிலாந்துக்கு எதிராக நேற்று நடைபெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் லீக் ஆட்டமொன்றில் தென்னாபிரிக்க அணி அபார வெற்றிபெற்றுள்ளது.

13ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடந்து வருகிறது.

இதில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டமொன்றில் தென்னாபிரிக்கா – நியூஸிலாந்து அணிகள் புனேவில் மோதின.

இதில் தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அதன்படி அந்த அணியின் தொடக்க வீரர்களாக பவுமா மற்றும் டி கொக் ஆகியோர் களமிறங்கினர். பவுமா 24 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார்.

பின்னர் ஜோடி சேர்ந்த டி கொக் மற்றும் வான் டெர் டுசென் இணை ஓட்டங்களைக் குவித்தது.

இந்த ஜோடி2ஆவது விக்கெட்டுக்காக 200 ஓட்டங்களைக் குவித்த நிலையில், சதம் அடித்த டி கொக் 114ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பின்னர் வான் டெர் டுசென் 133 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இறுதிக் கட்டத்தில் டேவிட் மில்லர் அதிரடியில் மிரட்டினார். இவர் 53 ஓட்டங்கள் குவித்த நிலையில் ஆட்டமிழந்தார்.

பின்னர் தென்னாபிரிக்க அணி 50 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 357 ஓட்டங்களைக் குவித்தது.

நியூஸிலாந்து அணி சார்பாக பந்துவீச்சில் அதிகபட்சமாக டிம் சவுதி 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

பின்னர் 358 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய நியூஸிலாந்து அணிக்கு சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் வீழ்ந்த வண்ணம் இருந்தன.

தொடக்கம் முதலே தடுமாறிய நியூஸிலாந்து அணி வெறும் 35.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 167 ஓட்டங்களுள் சுருண்டது. இதன் மூலம் 190 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்கா அபார வெற்றி பெற்றது.

நியூஸிலாந்து அணி சார்பாக கிளென் பிலிப்ஸ் (60) அரைச்சதம் அடித்தார். ஏனையவர்களுள் வில் யங் (30) மற்றும் டேரில் மிட்சல் (24) ஆகியோர் தவிர வேற எவரும் இரட்டை இலக்கைத் தொடவில்லை.

தென்னாபிரிக்க அணி சார்பாக பந்துவீச்சில், அதிகபட்சமாக கேசவ் மகாராஜ் 4 விக்கெட்டுகளையும், மார்கோ ஜோன்சன் 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இந்த ஆட்டத்தின் நாயகனாக தென்னாபிரிக்காவின் வான் டெர் டுசென் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த வெற்றிமூலம் புள்ளிப் பட்டியலிலும் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது.

**உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை**

| நிலை | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | தென்னாபிரிக்கா | 7 | 6 | 1 | 0 | 0 | 12 | 2.290 |
| 02 | இந்தியா | 6 | 6 | 0 | 0 | 0 | 12 | 1.405 |
| 03 | அவுஸ்திரேலியா | 6 | 4 | 2 | 0 | 0 | 8 | 0.970 |
| 04 | நியூஸிலாந்து | 7 | 4 | 3 | 0 | 0 | 8 | 0.484 |
| 05 | பாகிஸ்தான் | 7 | 3 | 4 | 0 | 0 | 6 | -0.024 |
| 06 | ஆப்கானிஸ்தான் | 6 | 3 | 3 | 0 | 0 | 6 | -0.718 |
| 07 | இலங்கை | 6 | 2 | 4 | 0 | 0 | 4 | -0.275 |
| 08 | நெதர்லாந்து | 6 | 2 | 4 | 0 | 0 | 4 | -1.277 |
| 09 | பங்களாதேஷ் | 7 | 1 | 6 | 0 | 0 | 2 | -1.446 |
| 10 | இங்கிலாந்து | 6 | 1 | 5 | 0 | 0 | 2 | -1.652 |